

அமரர்

# திருமதி கந்தையா செல்லமுத்து

அவர்களின் சிவப்பேறு எய்தியமை குறித்து வெளியிடப்பட்ட


# நினைவு மலர்

06.11.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி



மறவன்புலவு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும்
மட்டுவில்நாடு மேற்கு நெற்புலவை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி கந்தையா செல்லமுத்து

அவர்களின்

# நினைவு மலர்

**06.11.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அரும் பெரும் செல்வங்கள் எண்ணவரை ஈழ்ந்த
பெரும் சுடர் விளக்கே
எண்ணவர்க்கும் ஏணிப்படியாக
நீ இருந்து எங்களையெல்லாம்
உயர் நிலைக்கு உயர்த்திய தெய்வமே
எங்களை எல்லாம் தவிக்கவிட்டு
எங்கே ஓடி மறைந்தீர்கள் அம்மா
திரும்பும் திசைகளெல்லாம் உன்
முகமே தோன்றுதம்மா உன்
புன் சிரிப்பைக் கண்டு மகிழும்
காலம் எனியெப்ப வருமோ அம்மா
அன்னையின் தாலாட்டில் உறங்கிடும்
நிலை எப்போது வரும் என்று ஏங்கி
நிக்கிறோம் உங்கள் பிள்ளைகள் அம்மா
தத்தித் திரியும் காலங்களில்
உன் மடியே எங்கள் பஞ்சு
மெத்தையம்மா ஒரு கணமேனும்
எங்களைக் கண் திறந்து பாராயோ
எங்கள் அன்புத் தெய்வமே ஆசை அம்மாவே
ஆல விருட்சமாக விழிதெறிந்த அம்மாவின்
ஆத்ம சாந்திக்கும் திருவடிக்கும்
ஏழ்வரின் கரத்தினாலும் வண்ணமலர்கள்
அள்ளி அம்மாவின் பாதமதில் சொரிகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெயவத்துள் வைக்கப் படும்"



புவி மலர்
1937
08
13

விண் அகல்
2015
10
07

அமரர்

# திருமதி கந்தையா செல்லமுத்து


அவர்களின்

மகிள்வார் மன்மத ஆண்டினிலே
நிலவொளியாம் ஐப்பசி மாதமதில்
பூண்டதோர் அபரபக்க தசமிதிதிதனிலே
புண்ணியவதியாம் செல்லமுத்துவும் இறையடிசேர்ந்தாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

தேவாரம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலாவொன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந்தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பலமாட ரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

### திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கரமன் றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுஉன் அடியின்கீழ்
இருக்க என்றார்.

திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீஅருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கந்தையா செல்லமுத்து அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழத்து மண்ணை முத்தமிட்டு வடமராட்சி சாவகச்சேரி மறவன்புலவு என்னும் கிராமத்தில் மூத்த குடிமக்களாக மண்ணை நேசித்து மகிழ்வோடு வாழ்ந்து வந்தவர்களாம் முத்துப்பிள்ளை கந்தையாவும் தில்லையம்பலம் செல்லமுத்துவுமாக பிறந்து வளர்ந்துவரும் நிலையில் திருமணப் பருவ வயதை எட்டியதும் முத்துப்பிள்ளை சேதுப்பிள்ளை மண இணையாரின் மகள் செல்லமுத்துக்கும் நாடறிய, நகரறிய தமிழ் பண்பாட்டு முறைப்படி *1948.08.10* திகதியில் திருமணம் நடந்தேறியது. பிறந்த மண்ணில் ஓராண்டு காலம் வாழ்ந்து விட்டு *1947*ல் வளமான தேசம் வந்தோரை வாழவைக்கும் மகிமை மிக்க மண்ணாம் பூநகரி என்னும் ஊரின் சிறப்பு மிக்க கிராமம் தான் மட்டுவில்நாகமேற்கு நெற்புல வளமான மண்ணில் வாழ்ந்து வந்தவர்கள்தான் கந்தையா செல்லமுத்து மண இணையராக பாசமிகு குடும்பமாகவும் மிக அன்பாகவும் வாழ்ந்து வரும் நிலையில் வறுமை துரத்தியபோதும் பனை, தென்னை, மாமரம், பலா இப்படியாக பழம், கனி தரும் மரங்களை வைத்து உற்பத்தி செய்வதில் நின்றுவிடாது சேனைச் செய்கை மிளகாய்த்தோட்டம், மரக்கறித்தோட்டம் இப்படியாக இருவரின் அயராத உழைப்பினால் வாழ்வதற்கான தளத்தை அமைத்தார்கள் நாட்டப்பட்ட மரங்களின் பயன்கள் கைக்கு வரமுன் வறுமையோ துரத்தியவாறு இருந்த போதும் முன்னோர்கள் நாட்டிய பனை வளங்களைக் கொண்டு கிழங்கு புளுக்கொடியல், ஓடியல், பனாட்டு இப்படியாக பனையின் பயன்பாட்டால் உயிர் வாழ்ந்து வரும் நிலையில் இருவரின் அன்பின் வெளிப்பாடாக மூத்த முத்தாக நவரத்தினமும், நற்குண முடையாள் நாகேஸ்வரியும், பூமகளாம் புஸ்பலஷ்மியும், காத்திரமானவளாம் கனகாம்பாளும், பல்லாக்கு நாயகனாம்பாலகிருஸ்னனும்யோகம்மிக்கவளம் யோகலட்சுமியும் தர்மத்தின் தந்தையாம் தர்மகுலசிங்கமும் செல்வரத்தினநாயகியாம் செல்வராணியுமாக எட்டு மக்களைப் பெற்றெடுத்த பெருமை மிக்கவளாக, செல்லமுத்து அம்மையார் வாழ்ந்ததார்.

எட்டு பிள்ளைகளும் அந்த நாளில் வளர்த்தெடுக்க அவர்பட்ட பாட்டினை சொல்லில் வடித்திட முடியாது. வேலையோடு வேலையாக பாய் பெட்டி, கடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக தாயாரின் வீட்டுத் தொழிலாம், தந்தையின் வயல், தோட்டம், இல்லா காலங்களில் கூலி வேலைகளுக்கும் செல்வார். இருவரும் ஒருநிமிடமேனும் சும்மா இருக்க மாட்டார்கள் மெல்லமெல்ல பிள்ளைகள் வளர்ச்சி அடைய தாய் தந்தையர்க்கு கையுதவிகள் வந்தபோதும் பிள்ளைகளின் வளர்ச்சிக்கேற்ப செலவு களும் அதிகரிக்கும் தங்கள் இருவரும் பசிபட்டினிகிடந்தாலும் பிள்ளைகளை எந்தவொரு ஏம்பலிப்புகளும் இல்லாது கல்வி கற்க வைத்து அவர் அவர்கேற்ப தொழில்வழிகாட்டியாக தந்தையும் நின்று வீட்டுப்பணிகள், பன்னவேலைகள் இப்படியா பெண்பிள்ளைகள் தாயிடம் கற்றும் நல்லமுறையில் நல்ல குடும்பமாக வாழ்ந்து அந்தந்த வயதும் வரவர திருமணமும் செய்து கொடுத்தார்கள் , எண்ணவரும் திருமணமாகி தனிக்குடித் தனம் சென்றார்கள் பிள்ளைகளின் கடமைகள் முடியும் தறுவாயில் தந்தையருக்கு நோயுற்று மனைவி. பிள்ளைகள் பேரப்பிள்ளை களை விட்டுப் பிரிந்து விட்டார் ஒருநாளேனும் கணவனைப் பிரிந்திராத செல்லமுத்து அம்மையாரின் வயிற்றில் இடிவிழுந்தை எண்ணிக் கவலையுற்று கலங்கினார் கணவரும் யாருக்கும் அடிபணியாரோ அப்படியானவரின் மனைவியாக வந்த எனக்கும் அந்த ரோசம், மானம் இருக்கத்தானே வேண்டும் என்று தன்மனதை தேத்திக்கொண்டு பொட்டை இழந்தாலும் நான் என்ற மிடுக்குடன் பிள்ளைகளுடனும், சீறல் சினப்பில்லாது மருமக்கள், பேரப்பிள்ளை கள், பூட்டப்பிள்ளைகள் என்று குதூகலமாக வாழ்ந்து வரும் நிலை யில் திடீர் என்று நோய்வாய்ப்பட்டு ஐந்தாறு மாதங்களாகப் படுக்கையில் கிடந்தாலும் தாய்க்கான கடமையாக பிள்ளைகள் மாறி மாறி பார்த்தார்கள் செல்லமுத்து தான் என்ற நினைவுடன் வாழ்ந்ததையும் தாய், தந்தையர்கள் மேல் பிள்ளைகள் காட்டிய பாசத்தினையும் பொறுக்க முடியாத காலனவன் செல்லமுத்து அம்மையாரை தன்னுடன் ஈர்த்துக்கொண்டான். செல்லமுத்து மண்மேல் வாழ்வை முடித்து **07.09.2015**இல் சிவபதமடைந்தார்.

"தோன்றில் புகழுடன் தோன்றனும்
அஃதிலர் தோன்றில் தோன்றாமை நன்று"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் திருவடிக்குச் சமர்ப்பணம்

அரும் பெரும் செல்வங்கள் எண்ணவரை ஈழ்ந்த
பெரும் சுடர் விளக்கே
எண்ணவர்க்கும் ஏணிப்படியாக
நீ இருந்து எங்களையெல்லாம்
உயர் நிலைக்கு உயர்த்திய தெய்வமே
எங்களை எல்லாம் தவிக்கவிட்டு
எங்கே ஓடி மறைந்தீர்கள் அம்மா
திரும்பும் திசைகளெல்லாம் உன்
முகமே தோன்றுதம்மா உன்
புன் சிரிப்பைக் கண்டு மகிழும்
காலம் எனியெப்ப வருமோ அம்மா
அன்னையின் தாலாட்டில் உறங்கிடும்
நிலை எப்போது வரும் என்று ஏங்கி
நிக்கிறோம் உங்கள் பிள்ளைகள் அம்மா
தத்தித் திரியும் காலங்களில்
உன் மடியே எங்கள் பஞ்சு
மெத்தையம்மா ஒரு கணமேனும்
எங்களைக் கண் திறந்து பாராயோ
எங்கள் அன்புத் தெய்வமே ஆசை அம்மாவே
ஆல விருட்சமாக விழிதெறிந்த அம்மாவின்
ஆத்ம சாந்திக்கும் திருவடிக்கும்
ஏழ்வரின் கரத்தினாலும் வண்ணமலர்கள்
அள்ளி அம்மாவின் பாதமதில் சொரிகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன்மார்களின் குரல் விம்பம்

எங்கள் தலைத்தீபம் அணைந்த துயரோ
ஆறமுன்னே துணைத்தீபமும் அணைந்ததம்மா
ஐயய்யோ அம்மா எங்களை விட்டு
எங்குதான் போனீர்கள் ஆசை அம்மாவே
பட்டினி பசியென்று பாலகரை வதைக்காமல்
எங்களை ஆளாக்க நீ பட்ட துயரைத்தான்
மறப்போமா எங்கள் அன்புப் பொக்கிசமே
பிள்ளைகள் தலை நிமிர்ந்து வாழவென்று
உனை உருக்கி எமை வழத்த தாயே
எமையெல்லாம் தவிக்கவிட்டுச் சென்றாயோ
ஏட்டினில் எழுதவிட்டு கல்வி என்னும் பாரினை
உன்மார்போடணைத்தூட்டிய தெய்வமே
இத்தோடு உன் பணி முடிவில்லையம்மா
தொழிலெனும் கல்வினை பயின்றூட்டிய
தந்தையும் எமை விட்டுப் போயினரே
நாமில்லா காலங்களிலே மனை வாழ மக்கள்
வாழவென்றோ மக்களுக்கு துணைவிகளை
தேடிவிட்டு நாம் வாழும் பொழுதினிலே
உத்தமர்களாய் வாழ வேண்டும் என்றதோர்
குறிக்கோலுடன் நீ இருந்தாயம்மா
எங்கள் முதல் முதல் கடவுளையெனி
எங்கு காண்போம் நய வஞ்சகனாம்
காலனுக்கும் உன் நிலை பொறுக்காமலோ
உனை வாவென அழைத்தானோ அம்மா
உன் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திப்போமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள்மார்களின் குரல் விம்பம்

எங்கள் வீட்டு நிறைகுடமோ அம்மா
தளம்பாது என்றிருந்தோமே
குத்து விளக்கோ அணைந்த கையோடு
எங்கள் நிறைகுடமும் சாய்ந்ததே அம்மா
தாலாட்டிச் சோறூட்டி எமை
வளர்த்த தெய்வமே எங்கம்மா போனீங்கள்
நீங்கள் போன இடமறியாது நாமெல்லாம்
கதறுவதும் உன் காதில் கேக்கலையோ
செல்வச் செழிப்புடனே நாம் வாழவென்றோ
திருமணப்பந்தத்திலே எமை எல்லாம் இணைத்து
அழகு பார்த்த அன்புத் தெய்வமே நீ அம்மா
மக்களாய் மருமக்களாய் பேரன்
பேத்திகளாய் உனைச் சூழவும் காத்திருந்தோமே
உன் பொன்னான வாய் திறந்தல்லோ
நீ போகுமிடம் சொல்வாயெனக் காத்திரிந்தோம்
தாயின் முகம் காணாமல் பிள்ளைகளும்
கதறுவது உன் காதில் கேக்கலையோ
எங்கள் இல்லங்கள் எல்லாம் சூரியனைப்
போல் ஒளிதந்த தாயே இப்போது இருளிலே
வாடுகிறோம்
திரும்பும் திசைகளெல்லாம் அம்மா
உன் குரலோ கேக்கிதம்மா
உன் வளமான வாழ்வதனை ஜமனுக்கும்
பொறுக்காமல் உனை வாவென அழைத்தானோ
அம்மா உன் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டப்பிள்ளைகள் குரல் விம்பம்

பூட்டன் எங்கே பூட்டி எங்கே என்றெல்லோ
ஓடோடி வந்திடுவாய் பாட்டியே
பாட்டி பாட்டி என்றல்லோ உன்
தாவணிக் கொய்யகச் சீலையில் பிடித்து
பின்வருவோமே
இருகரத்தால் எமை அணைத்து முத்தமிடும்
பாட்டியே எங்களை பதபதைக்க
விட்டுப்போனாயோ
எமையெல்லாம் கூட்டி வைத்தோ
உவப்பான கதைகள் சொல்லிடுவாய் பாட்டியே
பூட்டப்பிள்ளைகள் நாம் கதறுவதும்
உன்காதில் கேட்கல்லையோ பாட்டி
உங்கள் ஆத்ம சாந்திக்காய் கூடிநின்று
பிரார்த்திப்போமாக

## மைத்துனர் மைத்துனிமார்கள் குரல் விம்பம்

ஆல மரம்போல விழுதெறிந்த மச்சாளே
உன் செய்தி கேட்டல்லோ நிலைதடுமாறி
நிக்கிறோமே
நிம்மதியாய் இருந்த உங்களுக்குத் தேடி
வந்து இடிவிழுந்த காரணந்தான் என்ன மச்சாள்
நச்செனும் வார்த்தை உன் நாவிலே வந்ததில்லை
நய வஞ்சனையும் உன் நெஞ்சிலே
குடிகொண்டதில்லை
குற்றம் குறை கண்டு விட்டால்நேரே
நறுக்கெனப் பேசிடுவாய் மச்சாளே
உங்களோடு பழகியவரெல்லாம் மாண்டு
மடிகிறோமே எங்கள் ஆசைமச்சாளே
உங்கள் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரன் பேத்திமாரின் குரல் விம்பம்

அன்புக் கரத்தினால் அமுதூட்டிய
அப்பம்மா போன இடம் அறியாது கதறுகிறோம்
எங்களோடிருந்து புன்னகைக்கும் வேளையிலே
எங்களை தவிக்கவிட்டு போனதேனோ அம்மம்மா?
தம்பி, ராசா, மோனையென்று நித்தம்
அழைத்திடும் அப்பம்மா அம்மம்மாவே
ஓலமிட்டு நாம் கதறுவதும் உங்கள்
காதினில் கேக்கலை அம்மம்மா
மல்லர்களாய் பேரர்கள் நாமிருக்க
மதிமயக்கம் வந்தனவோ அப்பம்மாவே
கண்ணியமாய் நாம் இருக்கையிலே காலனும்
உமை அழைத்தானோ அம்மம்மாவே
பாலகராய் நாம்கூடி பதறுகிறோம்
பாசமிகு அப்பம்மா கண்திறந்து பாரம்மா
பாலராய் நாம் இருக்கையிலே
பழங்கதைகள் கூறுவாய் அம்மம்மா
பெரியோராய் பாலராய் நாம் நின்று
தீப்பந்தம் ஏந்துவதைக் கன்திறந்து பாராயோ
அப்பம்மா
உன் கிளை மரத்தின் விழுதுகளாய்
விம்மி விம்மி அழும் சத்தம் கேக்கலையோ
அம்மம்மா
இறுதி விடை கொடுத்திடவே நாம்
சூழ நின்று தீப்பந்தம் ஏந்தி நின்றோம் அம்மம்மா
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார் உறவினர்கள் குரல் விம்பம்

சொல்லமந்து அக்காவென்றல்லோ நாங்கள்
ஓடோடி வந்து குறைநிறை பேசிடுவோம்
என்ன கவலையில் வந்தாலும் எங்களை
சிரிக்கச் செய்து வழியனுப்பி வைப்பாயே அக்கா
அயலவர்களை மறந்து எங்கேதான்
போனாயோ அன்பு அக்காவே
எங்கள் அக்கா மலர் பந்தலாய் நீஇருக்க
எனியாரிடம்தான் போய் ஆறுவது அக்கா
நற்குணம் படைத்த நாயகியே
நாயகனிடம் சென்றாயோ அக்கா
ஆணிவேராய் நீயிந்து அயலாரை
பேணி வந்தாய் ஆசை அக்காவே
உன் முகம் பாராமல் பாவிகள்
நாமெல்லாம் கதறுகிறோம் அக்கா
முதிர்ந்த மரமொன்று முறிந்ததே
முத்தான கனிகளோ முத்தமெல்லாம் சிதறியதோ
முத்துப்பல்லக்கில் முழு நிலவாய் உனை
அலங்கரித்தல்லோ கொண்டுபோவார்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காய் கூடிநின்று
நாமெல்லாம் பிரார்த்திப்போமாக.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகன்மார் குரல் விம்பம்

பொய்மையே பேசிடா பொற்கொடியே
நீபோன இடம் அறியாது புலம்புகின்றோம் மாமி
மருமகன் என்று ஒருதரம் சொன்னால்
மறுகணமும் சொல்லாவோ என்று காத்திருப்போம்
மாமி
மருமகன் என்றதை மறந்தல்வோ அன்பு மாமி
மகனே மகனேயென்று தேனினும் இனியதாய்
அழைத்திடுவீங்களே அன்புத்தெய்வமே மாமி
எட்டியொரு வார்த்தையேனும் சொல்லாது
எங்கே போனீர்கள் அன்பு மாமியே
உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## மருமகள்மார்களின் குரல் விம்பம்

நீர் குமிழிபோல் எங்கள் மாமி ஓடிஓடி
எங்களிடம் வந்திடுவார் எனி யார்தான்
எங்களைத் தேடிவருவார்களோ மாமி
அன்பால் பாலூட்டிடும் மாமி இருக்கையிலே
எங்களுக்கென்ன குறையென எண்ணியிருந்தோமே
அன்பான மகான்களை எங்களிடம்
தந்துவிட்டு எங்கு ஓடி மறைந்தீங்கள் மாமி
ஒட்டியாணம் கட்டி ஒளித்து விளையாடும்
பேரன் பேத்திகளைக் காணாது எங்குபோனீர் மாமி
உங்களை சூழ நாமெல்லாம் இருக்கையிலே
உங்களை அழைத்தானோ காலனவன்
உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி

# சகலகலாவல்லி மாலை





சரஸ்வதி துதி

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தின் உள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

1. வெண்டா மரைக்கன்றி நின்பதந்
   தாங்கவென் வெள்ளை யுள்ளத்
   தண்டா மரைக்குத் தகாது கொலோ
   சக மேழுமளித்
   துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக
   வுண்டாக்கும் வண்ணம்
   கண்டான் சுவை கொள் கரும்பே
   சகல கலாவல்லியே.

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை
   தோய்தர நாற்கவியும்
   பாடும் பணியிற் பணித்தருள்வாய்
   பங்க யாசனத்திற்
   கூடும் பசும்பொற் கொடியே
   கனதனக் குன்று மைம்பாற்
   காடுஞ் சுமக்குங் கரும்பே
   சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அளிக்குஞ் செழுந்தமிழ் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

4. தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

5. பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி சொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

8. சொல்விற்பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சொற்கும் பொருட்கு முயிராம் மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலத்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடி யோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே.

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பி லுன்போல்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி

# கௌரி காப்பு



திருச்சிற்றம்பலம்

முன்னின்று செய்யுள் முறையாகப் புனைவதற்கு
என்னின்று அருள்செய் எலிவா கனப்பிள்ளையாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற் கா.

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின் னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திசைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளைஅற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியாரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியாரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அணிவோர்க்குத் தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனிற்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருள்வாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வும் உண்டு
எச்சகத்தி லுள்ளோரெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி

# ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணப சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளு மிளையோன் கையிற்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்கு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பிற்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கிற் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியாற் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணோ ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறைக் கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையிற் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றார் ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி

# திருவெம்பாவை



ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள் என்னே யென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசுமலர்ப் பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன் என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீஆட் கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச் சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். **12**

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். **13**

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால்ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்
வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து
# எம் நன்றிகள் !

அன்புக்கும் பண்புக்கும் அடையாளமாக விளங்கிய எங்கள் அம்மா சிவபதமடைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு ஓடிவந்து சகலவிதமான தேவைகளையும் ஒழுங்குமுறைப்படி செய்து முடிப்பதற்கு உதவிய அனைவருக்கும், வெளியூர், உள்ளூர்களில் இருந்து வந்து மரணச்சடங்கில் கலந்து கொண்ட மக்களுக்கும் மரணநாள் முதல் 31நாள் வரை காலை, மதியம், மாலை உணவுகள், தேனீர்கள் வழங்கிய அயலவர்கள் உட்பட அனைத்து உறவுகளுக்கும் அந்தியேட்டி பணிகளில் உதவிபுரிந்து அந்தியேட்டிக் கிரியைப் பூசைவரை பங்குகொண்டு மதியபோசனம் வரை நின்று பங்கு பற்றியோர்க்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் கிரியையில் பங்கு பற்றிய அனைத்து மக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



நன்றி

இங்ஙனம்
அன்னாரின் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விரு

முத்துதம்பி சேதுப்பிள்ளை
+
கந்தையா

**சேமமடு**

நவரத்தினம்
+
வள்ளிப்பிள்ளை

**நெற்புலவு**

நாகேஸ்வரி(அமரர்)
+
தேவரத்தினம்(அமரர்)

சந்திரவதனி
உதயகுமார்
சந்திரகலா
சந்திரமலர் (அமரர்)
தெய்வேந்திரகுமார்
(France)
சந்திரரூபி

**நெற்புலவு**

புஸ்பலச்சுமி
+
சிவசுப்பிரமணியம்

சிவலட்சுமி
சிவபுஸ்பதாஸ்
சிவதாஸ்
சிவசிறி

**நெற்புலவு**

கனகாம்பாள்
+
தனபாலசிங்க

தனேந்திரன்
சசிகலா
விசிகலா
மதிகலா
தயாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ச விருட்சம்

தில்லையம்பலம் மீனாச்சி
+
செல்லமுத்து

| நெற்புலவு | லண்டன் | யாழ்ப்பாணம் | நெற்புலவு | சுவிஸ் |
|---|---|---|---|---|
| கனகாம்பாள் | பாலகிருஸ்ணன் | யோகலட்சுமி | தர்மகுலசிங்கம் | செல்வராணி |
| + | + | + | + | + |
| தனபாலசிங்கம் | சாந்தமலர்(நெற்புலவு) | குலசிங்கம்(அமரர்) | விமலேஸ்வரி | உதயகுமார் |
| தனேந்திரன்<br>சசிகலா<br>விசிகலா<br>மதிகலா<br>தயாகரன் | பாஸ்கரன்<br>(கனடா)<br>பர்மினி<br>தர்மினி<br>(ஜேர்மன்)<br>பரிமிளா<br>பார்த்தீபன் | குலபவானி<br>குலறமணன்<br>குலறயனி<br>குலறஜீவன்<br>குலசீலன் | தர்மிலன்<br>(அவுஸ்ரேலியா)<br>றஜீக்கா<br>கஜீபன்<br>விதுஷன்<br>கேதுசா | தருண்<br>தாட்சாயினி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org